# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1807/5 - 2013 අප්‍රේල් මස 22 වැනි සඳුදා - 2013.04.22

*1807/5 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### மெதிரிகிரிய பிரதேச சபையின் தவிசாளர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

வடமத்திய மாகாணத்தின் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டமையால் மெதிரிகிரிய பிரதேச சபையின் தவிசாளர் ஒருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

விக்கிரம ஆரச்சிகே சம்பத் ஸ்ரீ நிலந்த விக்கிரமஆரச்சி எனும் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மெதிரிகிரிய பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. தெபுவத்தே கமராலலகே ஆனந்த ஸ்ரீ தர்மசேன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மெதிரிகிரிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஹத்துருசிங்ஹலாகே இந்திக்க ரஞ்ஜன் ஹத்துருசிங்ஹ ஆகிய நான், திரு. தெபுவத்தே கமராலலகே ஆனந்த ஸ்ரீ தர்மசேன என்பவர் மெதிரிகிரிய பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மெதிரிகிரிய பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
பொலன்னறுவை,
2013, ஏப்பிறல் 08.

5 – 129/1

---

### மெதிரிகிரிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

வடமத்திய மாகாணத்தின் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டமையால் மெதிரிகிரிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

விக்கிரமஆரச்சிகே சம்பத் ஸ்ரீ நிலந்த விக்கிரமஆரச்சி எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத்

தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும், மெதிரிகிரிய பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திரு. உடஹமுல்லமுதியன்சேலாகே சமித் சந்திர உடஹமுல்ல என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது மெதிரிகிரிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஹத்துருசிங்ஹலாகே இந்திக்க ரஞ்ஜன் ஹத்துருசிங்ஹ ஆகிய நான், திரு. உடஹமுல்லமுதியன்சேலாகே சமித் சந்திர உடஹமுல்ல என்பவர் மெதிரிகிரிய பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எச். ஐ. ஆர். ஹத்துருசிங்ஹ,<br>
தெரிவத்தாட்சி அலுவலர்,<br>
மெதிரிகிரிய பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,<br>
பொலன்னறுவை,<br>
2013, ஏப்பிறல் 8.

5 - 129/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.